# இயேசு ஊழியங்கள்

**105/229, எம்.டி.எச் சாலை, வில்லிவாக்கம், சென்னை – 600 049**

**போன் : 9003009752**

**ஈமெயில்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org**


பிரியமான அன்பு மகளே,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் உங்களையும் உங்கள் கருவிலுள்ள உங்கள் குழந்தையையும் கண்மணிப்போல் காத்த நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மனதார நன்றி கூறுகிறேன்.

கர்ப்பம் தரித்த என் அன்பு மகள்மார்களே இந்த கர்ப்பகாலங்களில் சந்திக்கிற மிகப்பெரிய பிரச்சனை என்றால் அது பயம் என்னும் கொடிய பிரச்சனைதான். இதை பொல்லாத சாத்தான் தான் உங்களுக்குள் கொண்டுவருகிறான். இதை நன்கு நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். மருத்துவரிடம் செல்லும் போது பயம், மருத்துவ சோதனை முடிவுகளைப் பார்க்கும் போது ஒரு பயம், இதை சாப்பிடலாமா? வேண்டாமா? என்ற பயம், ஏன் சில அன்பு மகள்மார்களுக்கு விக்கல் வந்தால் கூட குழந்தைக்கு எதுவும் ஆகிவிடுமோ என்ற பயம். இப்படித்தான் பொல்லாத சாத்தான் எல்லா விஷயங்களுக்கும் உங்களை பயப்படும்படி செய்து விடுகிறான். நீங்கள் ஒன்றை மட்டும் மறந்துவிடக்கூடாது. உங்கள் கருவில் உள்ளது கடைசிக்கால தீர்க்கதரிசன சந்ததி. சாத்தானுக்கோ, உலகத்துக்கோ பயப்படுகிற சந்ததி அல்ல. உலகத்தை ஜெயிக்கவும், சாத்தானை அழிக்கவுமே உங்கள் வயிற்றில் வளரும் குழந்தை உருவாக்கப்பட்டு உள்ளது. எனவே அப்படிப்பட்ட தேவனுடைய வீர சந்ததியை சுமந்து கொண்டிருக்கும் தாயாகிய நீங்கள் பயத்தை புறம்பே தள்ளுங்கள். தேவ அன்பினால் தைரியசாலியாய் இருங்கள். பூரன அன்பு பயத்தை புறம்பே தள்ளும் (1யோவான் 4:18).

என் அன்பு மகளே, இப்போது உங்கள் கையை வயிற்றில் உள்ள குழந்தையின்மீது வைத்து என்னோடு இணைந்து ஜெபியுங்கள்.

பரிசுத்தமுள்ள பரலோக பிதாவே நான் உம்மை என் முழு இருதயத்தோடு நேசிக்கிறேன். என் முழு பெலத்தோடும், என் முழு சிந்தையோடும் உம்மில் அன்புகூறுகிறேன். உம்முடைய அன்பு இப்போது என் பயத்தை என்னைவிட்டு எடுத்துப்போடுவதாக. என்னை உம் அன்பின் கரத்தால் பெலப்படுத்தும். என் வயிற்றிலுள்ள தீர்க்கதரிசியை ஆசீர்வதியும், பெலப்படுத்தும். நானும் என் குழந்தையும் இணைந்து சாத்தானை ஜெயிக்க உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் நல்ல பிதாவே, ஆமென்.

மேலும் ஜெப உதவிக்கு எங்கள் ஜெபவீரர்களை தொடர்புக்கொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*